**திரு. மா. தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, விவசாயத் துறை மேஸ்திரிகள் 30 ஆண்டு சர்வீஸ் போட்டும், அடிப்படைச் சம்பளம் தற்போது ப்யூன்களுக்குக் கொடுப்பதையும் விட மிகக் குறைவாக இருக்கிறது. தற்போதுள்ள விலைவாசி ஏற்றத்தை அனு சரித்து, அவர்களுடைய சம்பளத்தை ப்யூன்கள் சம்பள அளவி லாவது நிர்ணயிக்க, உயர்ந்த ஆவன செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது அந்தமாதிரி யோசனை சர்க்காருக்கு இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே. இந்த உணவு இலாகா ஆரம்பத்திலிருந்து உத்யோகத்தில் அமர்த்தப் பட்ட தலைமைக் கூலிகள், மேஸ்திரி இவர்களை இதுவரைக்கும் உத்யோகத்தில் நிச்சயமாக்காமல், டெம்பரரியாகவே வைத்திருப் பதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** உணவுத் திட்டத்தில் வேலை செய் பவர்கள் சில இடங்களில் தாற்காலிகமாக எடுக்கப்பட்டவர்கள். அவர்களை வேலை ஆனவுடன் அனுப்பிவிடுவார்கள். எங்கெல்லாம் நிரந்தரமாக்க முடியுமோ அங்கெல்லாம் அவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

### தூருவாரிகள்

*550 கேள்வி.—**திரு. நா. இராசாங்கம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூர் வட்டம் பெருமாள் ஏரி, தூர்வாரி மராமத்து செய்வதற்கு அண்மையில் புல்டோசர் வரவழைத்து வேலையைத் தொடங்காமலேயே வந்த புல்டோசரை அனுப்பிவிட்டது உண்மையா ?

(இ) மீண்டும் புல்டோசர் உதவியால் மராமத்து வேலை தொடங்க ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(உ) அப்படியானால், எப்போது வேலை தொடங்கும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) 1952-ம் ஆண்டில் தூருவாரி இயந் திரத்தின் (Bull dozer) உதவியுடன் தூருவார முயற்சி செய்யப்பட்டது. அந்த ஏரிப்படுகை சகதி நிறைந்திருந்ததால், இந்த இயந்திரத்தின் உதவியால் தூரு எடுக்க இயலவில்லை. எனவே சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை அதிகாரி அந்த தூருவாரி இயந்திரத்தைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

(இ) அத்தகைய செயற்குறிப்பு எதுவுமில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. நா. இராசாங்கம் :** கனம் சபாநாயகர் அவர்களே, 10,000 ஏக்கரா சாகுபடிக்கு உபயோகமாகக் கூடிய பெருமாள் ஏரி நாளா வட்டத்தில் குறைந்து இப்பொழுது 4,000 ஏக்கர் அளவிற்கு

[9th November 1966

வந்திருக்கிறது. அதிகமாக நெல் சாகுபடி செய்யக் கூடிய இந்த ஏரியை தூர்வாரி, மராமத்து செய்ய நடவடிக்கை உடனடியாக எடுப்பார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த ஏரியை தூர் வார வேண்டும் என்று பரிசிலனை செய்து வேலை செய்தது. இருந்தாலும், சில சமயங்களில் தண்ணீரை பூரா எடுத்து தூர் வார விவசாயிகள் சம்மதிக்கவில்லை. எப்பொழுதும் தண்ணீர் இருக்கிறது. எப்படியும் ஓரளவாவது செய்யவேண்டும் என்றுதான் இயந்திரத்தை அனுப்பியது. ஆனால், சகதி காரணமாக அந்த வேலை தடைபட்டு விட்டது.

**திரு. நா. இராசாங்கம் :** தூர் வாராத காரணத்தால், விவசாயம் மட்டுமல்ல பாதிக்கப்பட்டது; மேற்கில் தண்ணீர் வருவது நிற்காமல் வெள்ளம் எடுத்து, சமீபத்தில் பெய்த மழைகாரணமாக கிட்டத்தட்ட 500 ஏக்கரா விளைச்சல் போய்விட்டது. அதுசம்பந்தமான புகார்கள் வந்து சர்க்காரும் சில மானியங்கள் ஒதுக்கியிருக்கிறது. இதை உத்தேசித்தாவது, தக்க நடவடிக்கை எடுத்து, தூர் வாரி வேலையை மறுபடியும் செய்ய சர்க்கார் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்கத்திற்கும் அந்த எண்ணம் உண்டு. ஆனால், தண்ணீர் பூராவையும் விட்டுவிட விவசாயிகள் சம்மதிக்கவில்லை. எப்பொழுதும் விவசாயத்திற்கு தண்ணீர் வேண்டும் என்கிறார்கள். ஆகவே எந்தெந்த இடங்களில் தூர் வார முடியுமோ அந்த இடங்களில் செய்யலாம். ஆனால், சகதியாக இருந்ததால், அந்த வேலை நடக்க முடியவில்லை. அது பற்றி அரசாங்கம் பரிசிலனை செய்யும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, ஏரி எதுவாயினும் மண் எடுப்பதற்காக, சென்ற ஆண்டிலே எந்த எந்த பகுதிகள் தூர் வாரலாம் என்று ஒரு பட்டியலைக் கேட்டார்கள். அப்படி எழுதியும் அனுப்பப்பட்டது. ஆனால் அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அப்பேர்ப்பட்ட பட்டியல் அனுப்பிய தகவல் என்னிடத்தில் இல்லை.

### *Agricultural development*

* 551 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any technical assistance has been sought for from West Germany for establishing an Agricultural Development Project in Nilgiris district; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) சபைமுன் விவர அறிக்கை a ஒன்றுவைக்கப் பட்டுள்ளது.

---

a 897–898 பக்கங்களில் ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.